22.01.2026

அ.வ.எண். 820/2017

வா.சா.1 – திரு.துரைராஜ், த/பெ.கந்தசாமி.

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 22.01.2026 is accordance with the provision of Act X of 3331

**<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. வா.சா.ஆ.12 கிரய ஆவணத்தை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் வழித்தடம் உள்ளது சம்மந்தமாக காண்பிக்க வேண்டி தாக்கல் செய்துள்ளேன். சென்னியாண்டவர் கோவிலுக்கு செல்லும் மாமூல் வழித்தடம் சம்மந்தமாக காண்பிக்க வேண்டி தாக்கல் செய்துள்ளேன். சென்னியாண்டவர் கோவிலுக்கு செல்லும் மாமூல் வழித்தடம் என வா.சா.ஆ.12 ஆவணத்தில் எங்கு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சென்னியாண்டவர் கோவில் என குறிப்பிடவில்லை, மாமூல் வழித்தடம் என குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.12 ஆவணத்தில் மாமூல் வழித்தடம் என உள்ளதா என்றால் வண்டித்தடம் என்று உள்ளது.

2. மேற்படி வண்டித்தடம், சென்னியாண்டவர் கோவிலுக்கு செல்கிறது என ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.12 ஆவணத்தை வழக்கு தாக்கல் செய்யும்போது ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் 2022 ம் ஆண்டில் தான் இந்த சொத்தை வாங்கினேன். 2022 ம் ஆண்டில் சொத்தை வாங்கிய பிறகு தான் க.ச.எண்.310/2 ல் எனக்கு பாத்தியதை ஏற்படுகிறது என்றால் சரிதான். பொதுத்தடம் ஏற்கனவே உள்ளது. பொதுத்தடம் ஏற்கனவே உள்ளது என்பதை காட்டுவதற்கு என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் தாத்தா காலத்து வா.சா.ஆ.10 ல் அவரவர் பாகத்தில் நடந்துகொள்ள வேண்டியது, சென்னியாண்டவர் கோவிலுக்கு சென்று பூஜை செய்ய மற்ற பாகஸ்தர்கள் அனைவருக்கும் பாத்தியம் என உள்ளது. என்னென்ன காலைகளில் பாகஸ்தர்களுக்கு பங்கு ஒதுக்கப்பட்டது என்றால் க.ச.எண்.310/1, 310/3, 316 காலை ஆகும்.

3. வா.சா.ஆ.10 ஆவணத்தில், க.ச.எண்.310/2 காலையில் செல்லும் வண்டித்தடத்தின் வழியாக மேற்படி பாகஸ்தர்கள் சென்று எங்களுக்கு பாத்தியப்பட்டசென்னியாண்டவர் கோவிலுக்கு வழிபாடு செய்துகொள்ளலாம் என வாசகம் கண்டுள்ளதா என்றால் இல்லை, மாமூல் வழித்தடம் என உள்ளது. வா.சா.ஆ.12 ஆவணத்திலும், நான் என்னுடைய பிராதில் கோரியபடி வண்டித்தடம் செல்வதையோ, அத்தடத்தின் வழியாக சென்னியாண்டவர் கோவிலுக்கு காலம் காலமாக சென்று வருகிறோம் என்ற வாசகம் இல்லை என்றால் சரிதான்.

4. வா.சா.ஆ.13 என்ற ஆவணத்தை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் 2005ம் ஆண்டு முதல் தடம் உள்ளதை காட்ட தாக்கல் செய்துள்ளேன். 1970 ம் ஆண்டு முதல் தடம் உள்ளதை சொல்லியுள்ள நிலையில் அந்த ஆவணத்தை ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியான ஆவணம் இல்லை. 16 அடி தடம் என எனது வா.சா.ஆ.12 ஆவணத்திலும், எனது வழக்கு பிராதில் 12 அடி தடம் உள்ளது என குறிப்பிட்டுள்ளதை நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளாரா என்றால் ஆமாம். எனது பிரமாண வாக்குமூலத்தில் 1ம் பிரதிவாதி வீடு கட்டியுள்ளதாக சொல்லியுள்ளேன். நில அளவையர் வரைபடத்தில் 1ம் பிரதிவாதி வீடு என காட்டியுள்ளார் என்றால் ஆமாம். நில அளவையர் வரைபடத்தில், 1ம் பிரதிவாதி புல எண்.310/1 ல் வீடு என குறிப்பிட்டுள்ளார் என்றால் க.ச.எண்.310/1 மற்றும் 310/2 ல் உள்ளது.

5. நீதிமன்ற ஆணையர், 1ம் பிரதிவாதியின் க.ச.எண்.310/1 மற்றும் 310/2 ல் உள்ளது என்று அறிக்கை தாக்கல் செய்துள்ளாரா என்றால் க.ச.எண்.310 என மட்டும் குறிப்பிட்டுள்ளார். வா.சா.ஆ.12 ஆவணத்தின் சொத்து விவரத்தில், க.ச.எண்.310/2A காலையில் வடகோட்டில், கிழமேலாக பொது இடம் மற்றும் கிணர் வகையறா வரையிலும் விடப்பட்டுள்ள 16 அடி அகல வண்டித்தடத்திற்கும் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.12 ஆவணத்தில் உள்ள வரைபடத்தில், ஆவணத்தில் கண்டுள்ள வாசகத்தின்படி க.ச.எண்.310/2A கிழமேலாக 16 அடி வண்டித்தடம் செல்வதாக வரைபடத்தில் உள்ளதா என்றால் உள்ளது.

6. நீதிமன்ற ஆணையர் அறிக்கையிலும், நில அளவையர் வரைபடத்திலும்ம், எனது ஆவணத்தில் உள்ளவாறு 16 அடி அகல தடம் க.ச.எண்.310/2A காலையின் வடகோட்டில், கிழமேலாக பொது இடம் மற்றும் கிணர் வரை செல்கிறது என குறிப்பிட்டுள்ளாரா என்றால் ஆணையர் அறிக்கையில் க.ச.எண்.310/2A என குறிப்பிடவில்லை, க.ச.எண்.310 ல் குறிப்பிட்டுள்ளார். நில அளவையர் வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. க.ச.எண்.310/2A உள்ள தடத்தை குறிக்க வேண்டி நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டார் என்றால் ஆமாம். நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கும், சர்வேயர் வரைபடத்திற்கும் நான் ஆட்சேபணை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

7. நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் , சர்வேயர் வரைபடத்தை ஏற்றுக்கொண்டு பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். கிணர், பொது இடம், வா.சா.ஆ.12 ஆவணத்தில் உள்ளது என்றும், அதில் நில அளவையரும் குறியீடு செய்துள்ளார் என்றால் சரிதான். சர்வேயர் வரைபடத்தில் என்ன வண்ணத்தில் காட்டியுள்ளார் என்றால் நிறம் கொடுக்கவில்லை, பொது இடத்தை தனியாக குறிப்பிடவில்லை. வா.சா.ஆ.12 ஆவணத்தில், கிணர், பொது இடம் வரை செல்லும் வண்டித்தடம் என்று தான் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.12 ஆவணத்தில் பாக்கியம்மாள் வீட்டிற்கும் கிணர், பொதுஇடத்திற்கும் தெற்கு என எல்லை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

8. 1ம் பிரதிவாதி 20- 25 ஆண்டுகளாக க.ச.எண்.310/1 காலையில் வீடு கட்டி குடும்பத்துடன் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல, க.ச.எண்.310/2 காலையில் வசித்து வருகிறார். க.ச.எண்.310/2 காலையில் 1ம் பிரதிவாதி வீடு கட்டி குடும்பத்துடன் குடியிருந்து வருகிறார் என்ற விவரம் எப்போது தெரியும் என்றால் 1999 ம் ஆண்டு இடம் வாங்கியதிலிருந்து தெரியும். வா.சா.ஆ.12 ஆவணம் மூலமாக நான் கிரயம் பெறுவதற்கு முன்பாக 1ம் பிரதிவாதி வீடு கட்டி குடும்பத்துடன் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். வா.சா.ஆ.13 மற்றும் 14, அதாவது என்னுடைய வா.சா.ஆ.12 ஆவணத்தின் மூல ஆவணங்கள் அதன் உரிமையாளர்கள் கிரயம் பெறுவதற்கு முன்பே 1ம் பிரதிவாதி குடியிருந்து வருகிறார் என்றால் அது

பழைய வீடு ஆகும். அந்த வீட்டை 2014, 2015 ம் ஆண்டில் இடித்துவிட்டு புதிதாக கட்டினார்கள்.

9. எனக்கு சொத்தை கிரயம் கொடுத்தவர்கள் யாரும், 1ம் பிரதிவாதிக்கு எதிராக அவர்களுக்கு பாத்தியப்பட்ட க.ச.எண்.310/2A காலையில் உள்ள தடத்தை அடைத்துவிட்டார்கள் என்று வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் அது சம்மந்தமாக எனக்கு தெரியாது. நான் மேற்படி நபர்களிடம் இருந்து இடத்தை வாங்கும்போது அளந்து பார்த்து வாங்கினேன் என்றால் இல்லை. க.ச.எண்.310/2A காலை எங்கு முடிகிறத என நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் சர்வேயர் வரைபடத்தில் உள்ளதா என்றால் வரைபடத்தில் உள்ளது, அறிக்கையில் இல்லை. வரைபடத்தில் என்ன வண்ணத்தில் காட்டப்பட்டுள்ளது என்றால் வண்ணம் குறிப்பிடவில்லை. குறியீடு செய்யப்படவில்லை.

10. கிணறு மற்றும் கிணற்றை சுற்றியுள்ள பொது இடம், வாரி, வாய்க்கால், சேர்ந்து மொத்தம் 26 சென்ட் என்றால் இருக்கும், சரியாக தெரியவில்லை.வா.சா.ஆ.12 ஆவணத்தில், முதல் உரிமையாளரான ராமசாமி கவுண்டரிடமிருந்து, கிரயம் பெறும் சமயத்தில் தான் க.ச.எண்.310/2A காலையில் அவர் சொத்தில் தடம் விடப்பட்டுள்ளது என்றால் தடம் ஏற்கனவே இருந்தது, அந்த ஆவணத்தில் குறிப்பிட்டு காட்டப்பட்டுள்ளது. எந்த ஆவணம் மூலமாக எங்களுக்கு கூட்டு உரிமை பாத்தியம் என காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் 1950 ம் ஆண்டு என் தாத்தாவின் மூலப்பத்திரம் தாக்கல் செய்துள்ளேன்.

11. நான் வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் உரிமை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.1 ஆவணத்தில், க.ச.எண்.310/2A இல் நான் சொல்வது போல் 16 அடி வண்டித்தடம் செல்கிறது என்ற வாசகம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. சென்னியாண்டவர் கோவிலுக்கு சென்று பூஜை வகைறா செய்து கொள்ள வேண்டியது என குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 ஆவணத்தின் 7ம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் சென்னியாண்டவர் கோவிலுக்கு பூஜை செய்து கொள்ளலாம் என்று உள்ளது

எனவும், க.ச.எண்.310/2A காலை வழியாக சென்று மேற்படி கோவிலுக்கு பூஜை செய்து கொள்ள வேண்டியது என குறிப்பாக இல்லை என்றால் சரிதான், ஆனால் ஒரே தடமான க.ச.எண்.310/2A ல் உள்ள தடம் தான் உள்ளது.

12. நீதிமன்ற ஆணையர் சொத்தை அளவிடும் போது, வா.சா.ஆ.1 ஆவணத்தை அடிப்படையாக கொண்டு அளவீடு செய்யப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில், பழனிக்கவுண்டர் காடு வழியாக செல்லும், வண்டித்தடத்தில் நடந்துகொள்ளலாம் என்ற வாசகம் உள்ளது என்றால் சரிதான், அது பொதுக்கிணற்றில் இருந்து க.ச.எண்.310/3 காலைக்கு செல்லும் வழியாகும். வா.சா.ஆ.1 ஆவணப்படி எனக்கும், என் தகப்பனாருக்கும் எந்தெந்த காலைகளில் சொத்து ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் க.ச.எண்.316, 310/3 காலை ஆகும். க.ச.எண்.310/3 காலையிலிருந்து பழனிச்சாமி கவுண்டரின் காட்டின் வழியாக செல்லும் வண்டித்தடத்தின் வழியாக நாங்கள் பயன்படுத்தி கொள்ளலாம் என்ற வாசகம் உள்ளது என்றால் அவ்வாறு இல்லை.

13. வா.சா.ஆ.1 ஆவணத்தில் பக்கம் 6 ல், சி.பழனிக்கவுண்டன் பொழி வழியாய் மாமூலாய் தெற்கே போகும் வண்டித்தடம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், அது கிணற்றிலிருந்து, 2 மற்றும் 4 பாகஸ்தர்கள் தோட்டத்திற்கு சென்று கதிரை எடுத்து வருவதற்காக தான். வா.சா.ஆ.10 ஆவணத்தின், மூல ஆவணத்தில் மேற்கண்டவாறு வாசகம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இல்லை. நில அளவையரிடமும், ஆணையாளரிடமும், சி.பழனிக்கவுண்டன் பொழி வழியாய் மாமூலாய் தெற்கே போகும் வண்டித்தடத்தை அடையாளம் காட்டவில்லை என்றால் சரிதான், அது விவசாயத்திற்கு நடந்துகொள்வதற்காக மட்டும் தான் உள்ளது.

14. வா.சா.ஆ.12 ஆவணத்தின் அடிப்படையில், பழனிக்கவுண்டன் வகையறா பூமியை நான் கிரயம் பெற்றுள்ளேன் என்றால் ஆமாம். நான் கிரயம் பெற்ற பூமியில் தான் மேற்படி வண்டித்தடம் செல்கிறது என்றால் சரிதான். எனவே நான் வேண்டுமென்றே நீதிமன்ற ஆணையாளரிடமும், நில அளவையரிடமும் தடத்தை காட்டாமல் க.ச.எண்.310/2A இல் செல்லும் ஒரே தடம் தான் உள்ளது என்று பொய்யாக

சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.11 ஆவணத்தை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் பாக்கியம்மாள் வீட்டிற்கு முன்பாக தடம் செல்வதை காட்ட தாக்கல் செய்துள்ளேன். நில அளவையர் மற்றும் நீதிமன்ற ஆணையரிடம் பாக்கியம்மாளின் வீட்டை அடையாளம் காட்டினேனா என்றால் ஆமாம். நில அளவையர் வரைபடத்திலோ, நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் பாக்கியம்மாளின் வீடு குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் எதிர்மனுதாரர் வீடு என காட்டப்பட்டுள்ளது. இந்த வழக்கில் பாக்கியம்மாள் தரப்பினர் அல்ல என்றால் சரிதான். அவர் கணவர் தரப்பினராக உள்ளார்.

15. எனது பிரமாண வாக்குமூலத்தில், பத்தி 12 ல், பாக்கியம்மாள் என்ற 3ம் தரப்பினரின் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து, பாக்கியம்மாள் வீட்டிற்கு முன்பாக க.ச.எண்.310/2A காலையில் தடம் செல்வதாகவும் அந்த தடத்தை 1ம் பிரதிவாதி அடைத்துவிட்டதாகவும் கூறியுள்ளேன். பாக்கியம்மாளின் வீடு அடையாளம் காணப்படாத நிலையில் க.ச.எண்.310/2A காலை எங்கு முடிவடைகிறது என்றும், பாக்கியம்மாளின் வீட்டிற்கு முன்பாக க.ச.எண்.310/2A காலையில் தடம் செல்வதையும் நீதிமன்ற ஆணையர் அறிக்கை மூலமாக தெளிவுபடுத்தவில்லை என்றால் சரியல்ல.

16. வா.சா.ஆ.13 ஆவணத்தின் சொத்து விவரத்தில், வண்டித்தடம் என உள்ளது என்றால் சரிதான். எனக்கு வா.சா.ஆ.12 ஆவணம் மூலம் கிரயம் கொடுக்கும் போது அது எவ்வாறு 16 அடி வண்டித்தடம் என மாற்றப்பட்டுள்ளது என்றால் 2005 ம் ஆண்டு ராமசாமி கவுண்டர், ராஜனுக்கு எழுதிகொடுத்த கிரய பத்திரத்தில் உள்ள தடத்தில் 16 அடி வண்டித்தடம் குறிப்பிடப்பட்டுள்ளது. எனது பிரமாண வாக்குமூலத்தில், பத்தி 15 ல் 1ம் பிரதிவாதி, எனது தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்ட பூமிக்கு பொதுக்கிணற்றில் இருந்து தண்ணீர் பாய்ச்சும் தொட்டியை 1ம் பிரதிவாதி தரப்பினர் இடித்து தரைமட்டமாக்கினர் என சொல்லியுள்ள நிலையில் நீதிமன்ற ஆணையர் அவரது அறிக்கை மற்றும் சர்வேயர் வரைபடத்தில் காட்டவில்லை என்றால் சரிதான். எனவே நான் பிரமாண வாக்குமூலத்தில் மேற்கண்டவாறு பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

17. தாவா 2ம் அயிட்ட சொத்தில், சென்னியாண்டவர் கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்ட நான் எந்த விதமான ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் காடாம்பாடி கிராமத்திற்கான க.ச.எண்.310/2B க்கு உண்டான பட்டா எண்.529 ல் அம்மாசை கவுண்டரின் வாரிசான கருப்பகவுண்டர் மற்றும் சரசாத்தாள் ஆகியோர் பெயரில் உள்ளது என்றால் சரிதான். **15.04.2025 தேதியிட்ட காடாம்பாடி கிராம க.ச.எண்.310/2B க்கு உண்டான மாரப்ப கவுண்டர் மற்றும் சரசாத்தாள் பெயரில் உள்ள பட்டா எண்.529 எண் கொண்ட சிட்டா பதிவிறக்க நகல் பி.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

18. 2ம் அயிட்ட சொத்து சம்மந்தமாக அம்மாசை கவுண்டரின் வாரிசுகள் என் மீதும், மற்றவர்கள் மீதும் இந்த நீதிமன்றத்தில் அ.வ.எண்.139/2024 ஆக தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது என்றால் என் அப்பா பெயரில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது, என் பெயரில் இல்லை. அந்த வழக்கில் 6ம் பிரதிவாதி(இந்த வழக்கில் 1ம் வாதி) எனது தகப்பனார் எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்றால் ஆமாம். என் தகப்பனாருக்கு ஆதரவாக நான் சத்திய பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். மேற்படி வழக்கு சங்கதிகள் தெரியுமா என்றால் சிலது தெரியும், சிலது தெரியாது.

19. 2ம் அயிட்ட சொத்தை பொறுத்து வாதிகளாகிய எங்களுக்கு எந்தவிதமான உரிமையும் எழவில்லை என்றால் சரியல்ல. க.ச.எண்.316 காலையில், ஏற்கனவே 1ம் பிரதிவாதி வழக்கு தாக்கல் செய்து அவருடைய எல்லையை நிர்ணயம் செய்து அவர் ஆண்டு அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி அவரது சொத்தை 2024 ம் ஆண்டில் உட்பிரிவு அதற்கு ஆதரவாக வரைபடம் ஏற்பட்டுள்ளது என்றால் தெரியாது. எனது பிரமாண வாக்குமூலத்தில், பத்தி 18 ல், 1ம் பிரதிவாதியும், அவரது சகோதரர் கே.எஸ்.பழனிச்சாமியும், சென்னியாண்டவர் கோவிலுக்கு பாத்தியப்பட்ட இடத்தில் சிறு, சிறு கட்டிடங்கள் கட்டி வாடகைக்கு விட்டு வாடகை வசூல் செய்து வருவதாக சொல்லியுள்ளேன். நில அளவையர் வரைபடத்தில் சென்னியாண்டவர் கோவிலுக்கு பாத்தியப்பட்ட இடத்தில் கட்டிடம் கட்டியதாக குறிப்பிட்டுள்ளதா என்றால் கட்டிடம் குறிப்பிடப்பட்டுள்ளது,

சென்னியாண்டவர் கோவில் என்று குறிப்பிடவில்லை. 1ம் பிரதிவாதி அவருக்கு பாத்தியப்பட்ட இடத்தில் கட்டிடம் கட்டி வாடகைக்கு விட்டுள்ளார் என்றால் சரியல்ல.

20. எனது பிரமாண வாக்குமூலத்தில், பத்தி 22 ல் 1ம் பிரதிவாதி, மேற்படி சென்னியாண்டவர் கோவிலுக்கு செல்வதற்கு தனது பூமி வழியாக செல்லும் வண்டிப்பாதையை தவிர வேறு எந்த பாதையும் இல்லை என்று ஒப்புகொண்டுள்ளார் என சொல்லியுள்ளேன். என்னுடைய வழக்கு க.ச.எண்.310/2 A காலையில் வடகோட்டில், கிழமேலாக, சென்னியாண்டவர் கோவிலுக்கு செல்லும் தடத்தை 1ம் பிரதிவாதி அடைத்துவிட்டார் என்பது தான் என்றால் சரிதான். எனவே 1ம் பிரதிவாதி அவரது எதிர் வழக்குரையில் தடத்தை ஒப்புகொண்டுள்ளார் என்பது தவறு என்றால் சரியல்ல. கே.எஸ்.பழனிச்சாமி இந்த வழக்கில் தரப்பினர் அல்ல என்றால் சரிதான்.

21. க.ச.எண்.316 காலையில், அயிட்டம் 1ம் சொத்தில், கே.எஸ்.பழனிச்சாமி என்பவருக்கு, வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். கே.எஸ்.பழனிச்சாமி சொத்து சர்வேயர் வரைபடம், ஆணையாளர் அறிக்கையில் காட்டப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வழக்குக்கு தேவையான நபர்களை சேர்க்காததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல. 2ம் அயிட்ட சொத்தை பொறுத்து சொத்து உரிமை பிரச்சனை உள்ள நிலையில், அவரை சேர்க்காமல் பரிகாரம் கோருவதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

22. 1ம் பிரதிவாதி க.ச.எண்.310/2A காலையில் செல்லும் தடத்தை ஒருபோதும் அடைக்கவில்லை என்றும், அவர் அவருக்கு பாத்தியப்பட்ட க.ச.எண்.310/1ல் வீடு கட்டி நான் கிரயம் பெறுவதற்கு முன்பாக குடியிருந்து வருகிறார் என்றும், எங்களுக்கு பாத்தியப்பட்ட தடத்தை 1ம் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றும், கட்டிடம் எதுவும் கட்டவில்லை என்றும், ஆணையாளர் அறிக்கையும், 1ம் பிரதிவாதிக்கு சாதகமாக உள்ளது என்றும், எனவே நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur